[23rd January 1965

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, 1966-67-ல் அது பற்றி கவனிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : இது மிகவும் அவசர தேவையாக இருப்ப தினல், தேசீய நெருக்கடி என்று காரணம் காட்டாமல், அத்தியா வசியமான வேலை என்று உடனடியாக எடுப்பதற்கு சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தற்காலி கமாக நிறுத்திவைக்கப்பட்டு, போர்டிலிருந்து சில விஷயங்களைக் கேட்டிருக்கிருேம். தகவல் வந்த பிறகு அதை ஏற்பாடு செய்வோம்.

Gramasevaks

* 110 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the details of avenues for promotion reserved for Gramasevaks in the different branches of Panchayat Administration ; and

(*b*) the principles laid down in this regard?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) II-ம் பிரிவு கிராம சேவக் குகள், I-ம் பிரிவு கிராம சேவக்கு பதவிக்கு உயர்த்தப்படுகின் றனர். கல்வி வளர்ச்சி அதிகாரிகளாகவும், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிகளாகவும், -ம் பிரிவு நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாகவும், I-ம் பிரிவு கிராம சேவக்குகள் பதவி மாற்றம் மூலம் நியமிக்கப்படத் தகுதி பெறுவர்.

(இ) I-ம் பிரிவு கிராம சேவக்குகளுக்காக நிர்ணயிக்கப்பட் டுள்ள ‘துறைத் தேர்வுகளில்’ (Departmental Test) தேர்ச்சி பெற்றவர்களிலிருந்து அப் பதவிக்கு நியமனங்கள் செய்யப்படும்.

பதவி மாற்றம் மூலம் கல்வி வளர்ச்சி அதிகாரியாக நியமிக்கப் படவேண்டுமானல், I-ம் பிரிவு கிராம சேவக் (ஊழியப்) பொது விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

பதவி மாற்றம் மூலம் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியாக நியமி கப்பட வேண்டுமானல், I-ம் பிரிவு கிராம சேவக், “பஞ்சாயத்து வளர்ச்சிக் கணக்குகள்” “பஞ்சாயத்து வளர்ச்சி” ஆகிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

இத்துடன் இந்த விஷயங்கள் அனைத்திலும் கிராம சேவக் குகளின் தகுதியும் திறமையும் கவனிக்கப்படுகின்றன. தகுதியும் திறமையும் தோராயமாகச் சமமாயிருக்கும்போதுதான், அவர் களின் சீனியாரிட்டி கவனிக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கிராம சேவக்குகளில் எத்தனை சத விகிதம் முதல் பிரிவினராகவும், இரண்டாவது பிரிவினராகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது?

23rd January 1965]

கனம் திரு சே. ம. அ. மஜீத்: அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்குத் தனி கேள்வி கேட்கவேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கிராம சேவக்குகளிலிருந்து உயர் பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு என்ன முறை அனுஷ்டிக்கப் படுகிறது? அதற்கு ஏதாவது விசேஷக் குழு அமைக்கப்பட்டிருக் கிறதா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: சாதாரணமாக ஜாயிண்டு டெவலப்மெண்டு கமிஷனர். . .

(The hon. Member was heard saying something to the Hon. Minister and the Hon. Minister was heard giving some reply.)

MR. SPEAKER : This is not a conversation between the hon. Member Sri M. Kalyanasundaram and the Hon. Minister for Local Administration.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நான் கேள்வியை இன்னொரு தரம் கேட்கிறேன். கிராம சேவக்குகளிலிருந்து சீனியாரிடி படி அப்படியே பிரமோஷன் பண்ணுவதில்லை . . .

கனம் சபாநாயகர்: கனம் அங்கத்தினர் கேள்வியைக் கேட்க வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சீனியாரிடி பிரகாரம் அப்படியே பிரமோஷன் பண்ணுவதாக இருந்தால் இந்தக் கேள்விக்கு அவசியம் வராது. ஆனால், தகுதி, திறமை, கிராம சேவக்குகளின் விசேஷ திறமை இவைகளெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுகிறது. அப்படிச் சொல்லும்பொழுது, திறமையை பரிசீலிக் கக்கூடிய அதிகாரி யார்? அதற்கு ஒரு தனிக் கமிட்டி நியமிக்கப் பட்டிருக்கிறதா? அப்படியில்லா விட்டால் இந்த செலக்ஷனையும் சர்விஸ் கமிஷனிடம் ஒப்படைக்கப்படுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Panchayat Union, Kasthambadi

* 111 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to construct a building for the office of the Kasthambadi Panchayat Union and quarters for its staff in Arni taluk at Mullipet near Arni during 1964–65?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: 1964-65-ம் ஆண்டில் கஸ்தம்பாடி பஞ்சாயத்து யூனியன் அலுவலகக் கட்டிடம் கட்டும் உத்தேசம் இல்லை. இந்த ஆண்டில் இந்தப் பகுதியில் குன்னத்தூர் கிராமத் தில் கிராம சேவக் வீடு ஒன்று கட்டும் வேலை தொடங்கப்படும்.